பாடம் - 19

# சுத்தம் சுகம் தரும்

நகத்தை முறையாய் வெட்டிடுவோம்.
முகத்தை அழகாய் வைத்திடுவோம்.

தலையை நன்றாய் வாரிடுவோம்.
நிலையாய்த் தூய்மை பேணிடுவோம்.

காலில் பாதணி அணிந்திடுவோம்.
கண்ணியமாக நடந்திடுவோம்.

சுத்தம் நமக்குச் சுகந் தருமே.
நித்தம் நினைவிற் கொள்வோமே.

